# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 147 /பேரூ/2026**
**நாள் : 03.09.2026**

க. கோட்டைகருப்பசாமி,
ஜக்கம்பட்டி,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தாமரைக்குளம் பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி, ஜக்கம்பட்டி, .J.J. நகர், மாரியம்மன் கோவில் பின்புறம், வார்டு.8, கதவு எண். 294 என்ற முகவரியில் வசிக்கும் திரு. க. கோட்டைகருப்பசாமி என்பவரது 27.05.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2026 அன்று பெறப்பட்டு, 147/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி, ஜக்கம்பட்டி, J.J. நகர், மாரியம்மன் கோவில் பின்புறம், வார்டு.8, கதவு எண். 294 என்ற முகவரியில் வசிக்கும் திரு. க. கோட்டைகருப்பசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 27.05.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“தேனி மாவட்டம், தாமரைக்குளம் பேரூராட்சியில் உழுவை இழுவை வாகன ஒட்டுநராக பணிபுரிந்து வந்து வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு. மூக்கையா என்பவரது காலிப்பணியிடத்திற்கு துப்புரவு பணியாளர் பணியில் இருந்து முன்னுரிமை அடிப்படையிலும், கல்வித்தகுதி மற்றும் மேற்படி வாகனம் ஒட்டுவதற்கு தகுதி வாய்ந்த எனக்கு பதவி உயர்வு வழங்க வேண்டி மேற்படி தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலருக்கும் மற்றும் என் மனு மீது தக்க நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை, தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு 02.02.2026ஆம் தேதி விண்ணப்பம் செய்தேன்.

அதற்கு தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ந.க.எண். 390/2026/பேரு.3(1), 12.02.2026 நாளிட்ட குறிப்பாணையில் என் மனு மீது தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கை குறித்து இன்றைய நடைமுறை விவரத்தினை மனுதாரருக்கு தெரிவித்து அதன் அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கும் அனுப்பி வைக்குமாறு தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது என்று தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆகவே ஐயா அவர்கள் எனது 02.02.2026 நாளிட்ட விண்ணப்பத்திற்கும் மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதத்திற்கும் இதுநாள் வரை எந்தவொரு பதில் வழங்காமல் அலட்சியம் செய்து எனக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கிடைக்க விடாமல் காலம் தாழ்த்தி என்னை மன உளைச்சலுக்கு ஏற்படுத்தி வரும் தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. முருகன் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியும் உரிய காலத்தில் எனக்கு பதவி உயர்வு வழங்காத காரணத்தினால் பதவி உயர்வு முழுமையாக எனக்கு கிடைக்க வேண்டிய ஊதியம் கிடைக்காமல் இழப்பீடு செய்ததற்கு அவரிடமிருந்து இழப்பீட்டு தொகை பெற்று தர வேண்டியும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.06.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 29.06.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 151/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில்-

“தேனி மாவட்டம், தாமரைக்குளம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரியும் கோட்டைகருப்பசாமி என்பவர் பதவி உயர்வு கோரி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் முறையீடு புகார் மனு அளித்துள்ளார்.

தாமரைக்குளம் பேரூராட்சி அலுவலக 16.06.2026 நாளிட்ட குறிப்பாணை ந.க.எண். 390/2025/அ1ல் மேற்படி பணியாளருக்கு அரசாணை எண். 139, நாள் 03.10.2022ல் தெரிவித்ததன்படி தூய்மை பணிகள், தெருவிளக்கு பணிகள், குடிநீர் பணிகள் மற்றும் துப்புரவு பணியமைப்பு மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு (Outsource) மூலம் பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது மனுதாரர் விண்ணப்பத்தில் தெரிவித்த உழுவை இழுவை ஓட்டுநர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு வழிவகை ஏதும் இல்லை என்பதை மனுதாரருக்கு பதிவு அஞ்சல் ஒப்புகை உடன் அனுப்பப்பட்டு ஒப்புகை அட்டை மற்றும் குறிப்பாணை நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 04.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 10.07.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. க. கோட்டைகருப்பசாமி மற்றும் மனுதாரருக்கு உதவியாக திரு. ஜெகநாதன் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 04.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- “தேனி மாவட்டம் , தாமரைக்குளம் பேரூராட்சியில் நான் (கோட்டைகருப்பசாமி) 01.07.2010 முதல் நிரந்தர பணி அடிப்படையில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து

வருகிறேன். பேரூராட்சியில் 01.07.2023 முதல் காலியிடமாக உள்ள உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பதவிக்கு 02.07.2023 தேதியிலிருந்து எனக்கு முன்னுரிமை அடிப்படையில் எனக்கு பதவி உயர்வு வழங்கிட வேண்டி பல்வேறு மனுக்கள் பேரூராட்சியில் சமர்ப்பித்தேன்.

- இன்றைய விசாரணையின்போது பேரூராட்சி செயல் அலுவலர் உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பதவியானது வெளிமுகமை (outsourcing) மூலம் மட்டுமே நிரப்பப்பட வேண்டும் என அரசு ஆணையிடப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு மேற்காணும் பதவியை பதவி உயர்வு மூலம் வழங்கிட இயலாது என தெரிவித்துள்ளார்.

- ஆனால், தேனி மாவட்டம், அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் திரு. செ. முருகன் செயல் அலுவலராக பணிபுரிந்து வந்தபோது மேற்கண்ட அரசாணை எண். 139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.10.2022 நடைமுறையில் இருக்கும்போதே நிரந்தர தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. ராஜ்குமார் என்பவருக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கியுள்ளார். மேலும் அதே பேரூராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர் திரு. கோவிந்தராஜ் பணியிடையே மரணமடைந்த காரணத்தினால் அவரது வாரிசுதாரர் மனைவியுமான திருமதி. நாச்சியம்மாள் என்பவருக்கு கருணை அடிப்படையில் நிரந்தர தூய்மை பணியாளராக பணி நியமன ஆணை வழங்கியுள்ளார்.

- மேலே தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பணியிடத்திற்கான கல்வித்தகுதியும் மற்றும் வாகனம் ஓட்டுவதற்கான தகுதியும் நான் பெற்றுள்ளேன்.

- இந்நிலையில், உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பதவி உயர்வு கோரி பல்வேறு மனுக்கள் அளித்தும், தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. செ. முருகன் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்தி என்னை மன உளைச்சலுக்கு ஏற்படுத்தி வருகிறார். எனவே எனக்கு (கோட்டைகருப்பசாமி) பதவி உயர்வு மூலம் உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பதவிக்கு பணிநியமனம் செய்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6. எதிர்மனுதாரரான தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் 04.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தேனி மாவட்டம், தாமரைக்குளம் பேரூராட்சியில் மனுதாரர் திரு. க. கோட்டைகருப்பசாமி என்பவர் நிரந்தர தூய்மை பணியாளராக பணியாற்றி வருகிறார்.

- மனுதாரர் தனது 27.05.2026 நாளிட்ட புகார் மனுவில் தனக்கு தாமரைக்குளம் பேரூராட்சியில் 01.07.2023 முதல் காலிப்பணியிடமாக உள்ள உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பதவிக்கு பதவி உயர்வு வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

- இந்நிலையில், அரசாணை எண். 139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.10.2022ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி தூய்மை பணிகள்,

தெருவிளக்கு பணிகள், குடிநீர் பணிகள் மற்றும் துப்புரவு பணியமைப்பு மேற்கொள்ள வெளிமுகமை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) மூலம் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- தாமரைக்குளம் பேரூராட்சியில் 01.07.2023 அன்று காலியிடமாக இருந்த உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பணியினை மேற்காணும் அரசாணை அடிப்படையிலேயே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- அரசாணை எண். 139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.10.2022ல் வெளியிடப்பட்ட பிறகே மனுதாரர் 02.07.2023 முதல் தனக்கு உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்க கோருவது மேற்காணும் அரசாணைக்கு முற்றிலும் எதிரானதாகும். எனவே மனுதாரர் கோரும் இப்பதவி உயர்வு வழங்கிட சட்டப்பூர்வமாக எவ்வித வழிவகையும் இல்லை என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மேற்காணும் பதவி உயர்வு வழங்க இயலாத விவரத்தை மனுதாரருக்கு இப்பேரூராட்சியின் 16.06.2026 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின், புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தேனி மாவட்டம், தாமரைக்குளம் பேரூராட்சியில் 01.07.2010 முதல் நிரந்தர பணி அடிப்படையில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும், இப்பேரூராட்சியில் உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பணியாளர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றதன் காரணமாக 01.07.2023 அன்று முதல் மேற்படி பணியிடம் காலியிடமாக உள்ளது எனவும், தூய்மை பணியாளர் பணியிடத்திலிருந்து காலியாக உள்ள உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பதவிக்கு 02.07.2023 தேதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கிட பல்வேறு மனுக்கள் பேரூராட்சியில் அளித்தும், பேரூராட்சி செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என புகார் தெரிவித்திருப்பதை மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் புகார் மனு தொடர்பாக, பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் தாமரைக்குளம் பேரூராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளராக பணியாற்றி வருகிறார் எனவும், மனுதாரர் தனக்கு 01.07.2023 முதல் காலிப்பணியிடமாக உள்ள உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பணியினை வழங்கிட விண்ணப்பித்துள்ளார் எனவும், உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மை பணிகள், தெருவிளக்கு பணிகள், குடிநீர் பணிகள் துப்புரவு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிமுகமை மற்றும் ஒப்பந்த அடிப்படை (Outsourcing) மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அரசாணை (நிலை) எண். 139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.10.2022ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், இவ்வாணையின் அடிப்படையிலேயே 01.07.2023 முதல் காலியிடமாக இருந்த உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், இவ்வாறு 03.10.2022ல் வெளியிடப்பட்ட அரசாணைக்கு பின்னர் 02.07.2023 முதல் மனுதாரர் தனக்கு உழுவை இழுவை வாகன ஓட்டுநர் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்க கோருவது மேற்காணும் அரசாணைக்கு முற்றிலும் எதிரானதாகும் எனவும், எனவே மனுதாரர் கோரும் இப்பதவி உயர்வு வழங்கிட சட்டபூர்வமாக

எவ்வித வழிவகையும் இல்லை எனவும் தெரிவித்திருப்பதையும், மேற்காணும் விவரம் மனுதாரருக்கு **16.06.2026** நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலத்தை ஏற்று, மனுதாரரின் **27.05.2026** நாளிட்ட புகார் மனு தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2026**–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **03**–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. க. கோட்டைகருப்பசாமி ,
வார்டு.8, கதவு எண். 294,
மாரியம்மன் கோவில் பின்புறம், .J.J. நகர்,
ஜக்கம்பட்டி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம் - **625 512**.
2.செயல் அலுவலர்,
தாமரைக்குளம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

சென்னை–600 032